24th September 1958]

(*b*) No, Sir. The Maternity Assistant attached to the Local Fund Dispensary is attending to cases under the supervision of the Medical Officer.

SRI N. K. PALANISAMI : இந்த ஆஸ்பத்திரி கட்டினது 1956-ல், 1958-ம் வருஷக் கடைசி வரை டாக்டர் போடவில்லை என்பது வாஸ்தவமா? அதற்குக் காரணம் என்ன ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்த ஆஸ்பத்திரி பஞ்சாயத்து போர்டு திட்டம். இதற்கு வேண்டிய வகை அவர்கள் செய்ய வில்லை. ஜில்லா போர்டும் அதற்கு வேண்டிய பணம் இல்லையென்று கையை விரித்து விட்டார்கள்.

DR. SRIMATHI T. S. SOUNDARAM RAMACHANDRAN : இந்த டிஸ்பென்சரியில் இருக்கும் மருத்துவப் பெண் வெளியில் சென்று உதவி செய்ய வேண்டியிருப்பதால், இந்த மெடர்னிடி ஹோமுக்குத் தனியாக ஒரு மெடர்னிடி அஸிஸ்டென்ட் நியமிக்க சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா?

THE HON. SRI M. A. MANICKAVELU : அது பஞ்சாயத்து ஜில்லா போர்டு ஆகியவற்றின் பொறுப்பு. ஜில்லா போர்டே பணம் இல்லை என்று கையைவிரித்துவிட்டது. சர்க்கார் ஆஸ்பத்திரிகளுக்கே அம்மாதிரியான வசதி செய்து கொடுக்கக் கஷ்டமாக இருக்கிறது.

Untouchability

* 492 *Q*.—**SRI V. K. KOTHANDARAMAN** : Will the Hon. the Minister for Public Works be pleased to state the number of cases of caste repression (cases in connection with temple entry and the like) launched in 1957–58 in the State districtwar; under the following Acts :—

(1) Temple Entry Authorization Act, 1948 (Madras Act XII of 1948) ;

(2) Untouchability (Offences) Act, 1955 (Central Act); and

(3) Civil Disabilities (Removal) Act, 1951 (Madras Act XIV of 1951)?

THE HON. SRI P. KAKKAN : A statement[a] is placed on the table of the House.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், பாண்டிய நாட்டுப் பண்புக்கு உரிய முறையிலே, மதுரை மாவட்டத்தில் அதிகமான 23 தீண்டாமைக் கேசுகள் இருப்பதற்குக் காரணம், ஸ்ரீமான் தியாகராஜன் தினந்தோறும் எடுக்கும் தீவிர நடவடிக்கைதான் என்பது சர்க்காருக்குத் தெரியுமா ? (சிரிப்பு).

MR. SPEAKER : இம்மாதிரிக் கேள்வி போடுவது நல்லதல்ல. I think the Hon. Minister need not answer the question. If, however, he wants to answer, I have no objection.

THE HON. SRI P. KAKKAN : பாண்டிய நாட்டில் அதிகமான கேசுகள் இருப்பது அங்கே தீண்டாமையை ஒழிக்க அவர்கள் பாடு படுகிறார்கள் என்பதைத்தான் எடுத்துக் காட்டுகிறது.

SRI N. R. THIAGARAJAN : பாண்டிய நாட்டில் தீண்டாமை சம்பந்தமான வழக்குகள் அதிகமாக இருப்பதற்குக் காரணம், கனம் அமைச்சர் அவர்கள் சொன்னது போல், அங்கே நாங்கள் தீவிரமாக அந்தப்

---

[a] Printed as Appendix IV on page 667 infra.

[24th September 1958

பணியில் முன்னணியில் இருப்பதுதான். மீனுட்சி கோயிலில், ஹரிஜன பிரவேசங்கூட, அமைச்சர் அவர்களின் தலைமையின்கீழ்தான் நடைபெற்றது என்பது அரசாங்கத்துக்குத் தெரியுமா ?

MR. SPEAKER : அவர்களுக்குத் தெரியும் என்றுதான் சொல்லு கிறார்கள். (சிரிப்பு.)

Pearl fishing and sea-fishing at Tuticorin

* 493 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state whether there are enough steam launches at Tuticorin for pearl fishing and sea-fishing and if so, how many?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : There is only one vessel "Goherkhaleeli" stationed at Tuticorin. She is mainly intended for pearl and chank fishing work. She is also utilised for fishing operations whenever she is not required for pearl or chank fishing.

9-50 a.m. SRI V. K. KOTHANDARAMAN : இப்பொழுது தூத்துக்குடியில் முத்துக் குளிப்பு நடக்கிறது. அப்படி முத்து எடுக்கக்கூடிய மீனவர்களுக்குப் போதுமான அளவில் ஸ்டீம் லாஞ்சுகள் இல்லை என்று கூறுகிறார்கள். அவர்களுக்கு கொடுத்து வருவதாகவும் சொல்லப்படுகிறது. ஆகவே அவர் களுக்கு அதிகப்படியாக போட்டுகள் வேண்டியதாக இருப்பதால் அப்படிக் கொடுப்பதை அதிகப்படுத்துவதற்குச் சர்க்கார் முயற்சி எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : முத்துக் குளிப்பு வேலைகளுக்கு இப்போது போட்டுகள் அளிக்கப்பட்டு வருகின்றன. மேலும் இன்னும் அதிகப்படியான போட்டுகள் அவசியம் எனத்தோன்று கிறது. இன்னும் அதிகப்படியாக வேண்டும் என்று கேட்டால் கவனிக்கப் படும்.

Music

* 494 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) கல்லூரிகளில் சங்கீதக்கலை போதிக்கிறார்களா ?

(ஆ) வாத்திய சங்கீதமும் போதிக்கிறார்களா ?

(இ) அப்படியானால், என்னென்ன வாத்தியங்களில் ?

(ஈ) சங்கீதப் பயிற்சி பெற்றவர்களுக்கு வழங்கப்படும் பட்டங்கள் என்னென்ன ?

(உ) அரசாங்கம் இக்கல்லூரிகளுக்கு உதவிவரும் தொகை எவ்வளவு ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Yes.

(*b*) Yes.

(*c*) Instrumental music is taught in veena, violin and piano.

(*d*) In cases where music is studied as an integral part of the University courses of studies no separate degree or certificate in Music is issued. Candidates who are successful in the examination for the course in the Central College of Karnataka Music are awarded the title "Sangeetha Vidwan" of the College.